முருகப்பெருமான் துணை

**மகான் திருவள்ளுவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.05.2022, செவ்வாய்கிழமை

1. ஓங்கார ஞான சூட்சுமமே
ஓங்கார குடில் படைத்து அருளும்
ஓங்காரனே ஞான தேசிகனே
ஓதிடுவேன் உன் பெருமை கூறி அருளாசி
2. ஆசிதனை சுபகிருது தகர் திங்கள்
அறிவிப்பேன் இருபான் திகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 20ம் நாள், 03.05.2022 செவ்வாய்கிழமை)
வாசிவென்ற அரங்கன் கேட்க
வழங்குவேன் திருவள்ளுவர் யானும்
3. யானுரைக்க உண்மை தருமம்
உயர்வு தருகின்ற தடமாக
ஞானதேசிகன் சபை இருக்க
நம்பிக்கை வைத்து சரணடைய
4. சரணடைய சகல வகைதனிலும்
சற்குருவாய் அரங்கன் நிழல்
அரனாகப் பாதுகாத்து வரும்
ஆற்றலாக வழிகாட்டி நிற்கும்
5. நிற்கவே எங்கும் எதிலும்
நிலைத்தன்மையை தரவல்ல
அற்புதமும் மகத்துவமும் தரும்
அரங்கமகானுள் எந்தன் ஆசியும்
6. ஆசியும் வேதமாக நிறைந்து
ஆக்கம் ஊக்கமாக இருக்க
பேசிட ஓங்கார குடில் நோக்கி
பூவுலகோர் வந்தாலே போதும் என்பேன்
7. என்கவே மெய்நெறி பற்றி
எதிலுமே தயவை பெருக்கி
துன்பமில்லா வாழ்வாக மக்கள்
தேசிகனார் ஆசிபட வாழ நேரும்
8. நேருமை கொண்ட மக்கள் சமூகம்
நிலவுலகம் கண்டடைந்து வர
பெருமை மிக்க தலைமைகளும்
பொருள்பற்றிலா அதிகார வர்க்கமும்
9. வர்க்கமும் ஞானத் தேற்றமாகி
வளர்ச்சிமிக்க சேவைகளாகும்
தர்க்கம் கலகம் துன்பமில்லா
தருமவான்கள் தவசிகள் நிறைந்த

10. நிறைந்த ஞான பூமியாகி
நிலவுலகம் மாற்றம் காணும்
குறைந்த நிலை கூடி பேரிடரில்லா
குவலயமே நல்ல பாதுகாப்பை காணும்

11. காணவே அரங்கனே கலியில்
கந்தவேலன் அவதார ஞானி
ஞானவான்கள் அனுகி புடைசூழ
ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சி உருவாகும்
அருளாசி முற்றே

—சுபம்—